# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 29.01.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குத்பா இல்ஹாமிய்யாவில் ஓரிடத்தில் கூறுகிறார்கள். அல்லாஹ் எனக்கு வஹி மூலம் அறிவித்தான்.**

குல்லு பரக்கத்தின் மின் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஃபதபாரக மன்தஅல்லம வஅல்லம – முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது ஆன்மீக தாக்கத்திற்கேற்ப உமக்கு கற்பித்தார்கள. ரஹ்மத்தின் அருளை உமது உள்ளத்தின் பாத்திரத்தில் இட்டுள்ளார்கள். உங்களை தமது சஹாபாக்களுடன சேர்ப்பதற்காகவும் உம்மை தனது பரக்கத்தில் சேர்த்துக் கொள்வதற்காகவும், ஆகரீன மின்ஹும் (பின்னுள்ளவர்களிலிருந்து) என்ற செய்தியை நிறைவேற்றுவதற்காகவும் இதனை அல்லாஹ் உமக்கு செய்துள்ளான். ஆன்மீக ஒளி கொண்டு உம்மை பிரகாசமாக்கினான். வெளிப்படையான ஒளியும் வழங்கினான். நல்லியல்பு கொண்டோர் அதிலிருந்து பயனடைய வாய்ப்பை ஏற்படுத்தினான். ஏனெனில் ஆகரீன்களுக்கு இமாம் ஆக இருக்க வேண்டியிருந்ததால் சஹாபாக்களின் ஒளி மட்டும் போதுமானதாக இருந்ததில்லை. மாறாக, அதனை விட அதிகமாகவே தனது எஜமானரின் கருணையால் அல்லாஹ் அவரை ஓர் எச்சரிப்பாளராக ஆக்கினான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத் சஹாபாக்களின் ஜமாஅத்துடன் ஒப்புமை உள்ளதாகும். இந்த ஜமாஅத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் நிழலாக – உவமையான முறையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஒப்புமை கொண்டவராவார்கள். அதனைக் குறித்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுமே 'அவர் தம்மை ஒத்தவராக இருப்பார்' என்று கூறியுள்ளார்கள். எஜமானரின் உன்னத பேரொளி அடிமையிடமும் தோன்றுவதற்கு இந்த ஒப்புமை அவசியமானது.

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களின் மேற்கோள்களிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அழகு மற்றும் ஒளியை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்கள் அவர்களின் வெளிப்படையான ஒளியை எப்படிப் பார்த்தார்கள் என்று நாம் முதலில் பார்க்கலாம்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (அலை) அவர்கள் எழுதுகிறார்கள். இது டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயில் சாஹிப் உடைய அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோற்றப் பொலிவை ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் எனில், ஆன்மீக அழகின் ஓர் உயரிய முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அந்த வெளி அழகு தமக்குள் ஆன்மீக அழகையும் உன்னத மகிமையையும் தமக்குள் கொண்டிராவிடில் மேற்சொன்ன வாக்கியம் முழுமையற்றதாக இருந்திருக்கும். அவர்களின் மென்மையும் கூட இறை வல்லமையின் ஒரு வெளிப்பாடாகவே இருந்தது. பார்ப்பவரின் உள்ளத்தை ஈர்ப்பதாக இருந்தது. அவர்களின் முகத்தில் தற்பெருமை, கர்வம் இருந்ததில்லை. மாறாக எளிமை, பணிவு, அன்பு மட்டுமே இருந்தது. அவர்களின் நிறம் மிக உயரிய கோதுமை நிறமாக இருந்தது. அதில் ஒரு ஒளியும் சிவந்த மினுமினுப்பும் இருந்தது. இந்த மினுமினுப்பு தற்காலிகமானதாக இல்லாமல் அவர்களின் முகத்தில் நிரந்தரமாக இருந்தது. சோதனை, வழக்குகளை சந்திக்கின்ற வேளையில் கூட அது (மினுமினுப்பு) தென்பட்டது. அவர்களின் நெற்றியும் முகமும் பொன்னைப் போன்று மின்னியது. எந்த துன்பமும் அந்தத் தோற்றப்பொலிவை அகற்றியதில்லை. மாறாக, இந்த ஒளியுடன் அம்முகத்தில் சாந்தமும் புன்னகையும் நிரந்தரமாக காணப்பட்டது.

இம்மனிதர் இட்டுக்கட்டிக் கூறுபவராக இருப்பார் எனில், அவரது உள்ளம் அவரை பொய்யாக்கி இருக்கும் எனில் அவரது முகத்தில் இருந்த ஒரு சாந்தம், மகிழ்ச்சி, மனநிறைவு ஆகியவற்றின் அறிகுறி எப்படி தென்பட முடியும் என்று பார்ப்பவர்கள் கூறினர். அந்தரங்கத்தில் அசுத்தம், வெளித்தோற்றத்தில் இத்தனை பொலிவு ஆகிய இரண்டும் ஒன்றுசேரவே முடியாது. ஈமானின் ஒளி தீயவரின் முகத்தில் தென்படவே முடியாது.

எவ்வளவு அழகாக அவர்களின் ஒளியும், அழகும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இந்த வெளிப்படையான ஒளியும்கூட தமது எஜமானரின் ஆன்மீக ஒளியில் முற்றிலுமாக மாய்ந்து விட்டவர்களாக இருந்ததால் வழங்கப்பட்டதாகும். அதன் மூலமே அவர்களின் ஒளியில் நூரே முஹம்மத் – முஹம்மதின் ஒளி தென்பட்டது.

**ஒரு ஃபார்ஸி கவிதையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

''நான் நிச்சயமாக முஸ்தஃபா (ஸல்) அவர்களின்
அந்த அழகிய நண்பரின் அழகால் மெருகூட்டப்பட்டவன்!
தன்னிறைவு பெற்ற ரப் –ன் தரப்பிலிருந்து ஒரு கண்ணாடி போன்றவன்!
அந்த மதினத்து சந்திரனின் ஒளியை பிரதிபலித்துக் காட்டுபவன்!''

ஆக, அந்த அழகுகளில் அவர்களின் சொந்தம் எதுவுமில்லை. உயிரும், உடலும் முஹம்மதின் ஒளியை பிரதிபலித்துக் காட்டுவதாகவே இருந்தது. இபாதத்துகள், பழக்கவழக்கங்கள் அனைத்திலும் தனது எஜமானரின் முகத்தைப் பார்த்து அதனைப் பின்பற்றினர்.

தமது அன்பு மஸீஹ் மஹ்தி பற்றி அவரது ஸ்தானம் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கூறியிருந்தார்கள்.

''எனக்கும் எனது மஹ்திக்கும் இடையில் எந்த நபியும் இல்லை.''

இந்த ஃபனா – தன்னையே மாய்த்து விடுதலின் காரணத்தால்தான் நபி என்ற பதவி கிடைத்தது. இது பேரன்பினால் கிடைத்ததாகும். இதுவே அவர்களின் பேருபகாரத்தால் நஸீர் – எச்சரிப்பாளர் ஆக்கியது. ஆனால் முழுமை பெற்ற மனிதர் என்பவர் ஒருவர்தான். அவர் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மட்டும் தான்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தனது ஒரு கவிதையில் கூறுகின்றார்கள்:**

சீடர்கள் பெற்ற எல்லாமே ஆசிரியரின் செல்வத்தால்தான். அஹ்மதை, முஹம்மதை விட்டும் பிரிந்தவராக எப்படி கருதுவீர்கள்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அந்தஸ்து ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை விட உயர்ந்தது என்று (நவூதுபில்லாஹ்) ஓர் அஹ்மதி ஒரு வினாடி கூட கருதுவாரா?

இந்த அபாண்டப் பழி இக்காலத்தில் அஹ்மதிகளின் மீது – ஜமாஅத்தின் மீது தற்காலத்தில் சுமத்தப்படுகிறது. உண்மையில் அஹ்மதிகள் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்தை சரியாகப் புரிந்தவர்கள் ஆவர். எஜமானர் – அடிமையின் இத்தொடர்பு பற்றி **ஹஸ்ரத் குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி அவர்களின் ஓர் அறிவிப்பில்** வருகிறது.

ஸய்யதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நற்பேற்றால் ஒருமுறை நான் கனவில் கண்டேன். ஸய்யதுனா அன்பியா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் இந்த எளியவன் மூன்று பேரும் ஓரிடத்தில் நிற்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒளியாலான முகம் சூரியனைப் போன்று மின்னிக் கொண்டிருக்கிறது. அவர்கள் கிழக்கு நோக்கி தமது முகத்தை திருப்பி வைத்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முகம் சந்திரனைப் போன்று பிரகாசமாக இருந்தது. அவர்கள் மேற்கு நோக்கி முகம் திருப்பியுள்ளார்கள். இந்த பரிசுத்தவான்கள் இருவருக்கும் மத்தியில் இந்த எளியவன் நிற்கிறேன். இருவரின் ஒளியாலான முகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனது நற்பாக்கியத்தை எண்ணி வியந்தவாறு, ''எத்தைகய நற்பாக்கியம்! நான் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் பெற்று விட்டேன். ஹஸ்ரத் இமாம் முஹம்மது மஹ்தி (அலை) அவர்களையும் பெற்று விட்டேன்'' என்று கூறுகிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய முகம் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய முகத்திலிருந்து ஒளி பெறுவதாகக் காண்கிறேன்.

**ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜேகி தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நான் இரண்டாவது நாளும் தூங்கிய போது கனவில், ஹஸ்ரத் ஷேக் சஅதி ஹிராஸி (ரஹி) அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னைப் பார்த்து, ''தாங்கள் எத்துணை நற்பாக்கியம் பெற்றுவிட்டீர்கள். இமாம் மஹ்தி (அலை) அவர்களுடைய காலத்தையும் பெற்று விட்டீர்கள். என் சார்பாகவும், ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களுக்கு சலாம் கூறிவிடுங்கள்'' என்று கூறினார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜேகி சாஹிப் கூறுகின்றார்கள்: அந்நாட்களில் நான் ராஜேகியில் தங்கியிருந்தேன். அப்போது அஹ்மதி என்ற பெயர் வைக்கப்படவில்லை. நான் எனது கனவை குறிப்பிட்டு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதினேன். ஹஸ்ரத் ஷேக் சஅதி (ரஹி) அவர்களுடைய ஸலாமையும் அதில் தெரிவித்தேன். சில நாட்கள் கழித்து எனக்கு மீண்டும் இமாம் ஷேக் சஅதி (ரஹி) அவர்களின் தரிசனம் கனவில் கிடைத்தது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், அவரது ஸலாமை எட்ட வைத்ததற்காக மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். எனது கையில் ஒரு நூல் -ஐ கொடுத்து விட்டு, இது என் சார்பாக ஓர் அன்பளிப்பு என்று கூறினார்கள். அந்த நூலின் பெயர் சிராஜுல் அஸ்ராப் என்று எழுதப்பட்டிருந்தது.

இன்னொரு அறிவிப்பில் **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எழுதுகிறார்கள்:**

காத்தூன் அமத்துர் ரஹ்மான் பின் காஸி ஸியாவுத்தீன் சாஹிப் மர்ஹூம் அவர்கள் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் மிர்ஸா ஃபஸ்ல் அஹ்மது சாஹிப் என்ற அன்னாரது மகனின் மரணச் செய்தி கிடைத்த போது (இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முதல் இரண்டு மகன்களில் இளையவர்) மக்ரிப் நேரமாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதிலிருந்து இஷா வரை இருந்தார்கள் அவர்களின் முகம் பிரகாசமாக மின்னிக் கொண்டிருந்தது.

**ஹஸ்ரத் மியான் ரஹீம் பக்ஷ் சாஹிப்** உடைய ஓர் அறிவிப்வில் கூறுகின்றார்கள்:

ஒரு நாள் ளுஹர் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப் வீட்டிற்குள் சென்று விட்டார்கள். நாங்கள் பின் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்த போது தமது வீட்டிற்கு செல்லும் குறுகிய ஜன்னல் அருகில் நின்று கொணடு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஹக்கீம் நூருத்தீன் சாஹிபிடம் (புத்தகம் தொடர்பாக) ஒரு ஆதாரம் கேட்க வேண்டியிருந்தது. அதனை கேட்டுக் கொண்டிருந்த போது நான் அந்த ஜன்னல் வழியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்க்கிறேன். ஹுஸூர் அவர்களின் தலையில் தலைப்பாகை இல்லை. சிறு துண்டு மட்டும் வைத்திருந்தார்கள். அந்த முகத்தின் அழகை என்னால் விவரிக்க இயலாது. அவர்களின் முகத்தில் இருந்த ஒளியால் அப்பகுதி முழுவதும் ஒளியால் நிரம்பி இருப்பதாக தென்பட்டது. அவர்களின் முகத்தால் அந்த இடமே பிரகாசமாக தென்பட்டது. அந்த முகத்தின் தோற்றம் பற்றி எனக்கு எப்போது நினைவு வந்தாலும் வியக்கத்தகு உணர்வு ஏற்படுகிறது. அக்காட்சி இன்னும் என் கண்ணுக்குள்ளே இருக்கிறது. ஹுஸூர் (அலை) அவர்கள், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் ஏதோ விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வெளியே வந்ததும் ஹுஸூர் (அலை) அவர்கள் உள்ளே சென்று கதவை தாழிட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பழக்கவழக்கங்கள் குறித்து டாக்டர் பஷாரத் அஹ்மத் சாஹிப் எழுதுகிறார்கள்:

1906-ல் நான் ஒரு நீண்ட விடுப்பு எடுத்துக் கொண்டு காதியான் சென்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உடல்நலமில்லை. கடும் தலைவலி இருந்தது. எனினும் அதே வலியுடன் அன்னார் ளுஹர் தொழுகைக்காக பள்ளிவாயிலுக்கு வந்தார்கள். நான் அவர்களின் முகத்தில் தலைவலியின்

அறிகுறியைக் கண்டேன். ஆனால் நெற்றியில் ஒரு ஒளிப்பிழம்பு மின்னியதாக தென்பட்டது. அதனைப் பார்த்து எனது கண்கள் நனைந்தன. உள்ளம் கரைந்தது. அந்த அசாதாரணமான ஒளி எப்படி வந்தது என்று இன்று வரை எனக்கு தெரியவில்லை. நான் கூறுவது, எப்போதேனும் நடக்கும் அதிசய சம்பவமும், உள்ளத்தில் நீங்காது நிலைத்து நிற்கும் நினைவுகளும் ஆகும்.

அதுவன்றி பரிசுத்த தன்மையின் அடையாளமோ அவர்களின் முகத்தில் எப்போதும் தென்படக்கூடியதே. அதனைப் பார்த்த மனிதன் தாக்கத்திற்குள்ளாகமல் இருப்பது சாத்தியமே இல்லை. இந்துக்களும்கூட அதனை ஒப்புக் கொண்டிருந்தனர்.

மேலும் கூறுகின்றார்கள்: பட்டாலா – காதியான் செல்லும் வழியிலுள்ள ஒரு ஆற்றங்கரையில் ஒரு இந்து கடை வைத்திருந்தார். அவர் கூறுகிறார். மகராஜ்! நான் இங்கு கடந்து செல்கிற பலரை அறிவேன். பெரிய பெரிய பட்டான்கள் எல்லாம், இன்று மிர்ஸாவுக்கு ஒரு தீர்வு கண்டுவிட்டு தான் வருவோம் என்று சூளுரைத்தவர்களாக கடந்து செல்வதை கண்டுள்ளேன். ஆனால் திரும்பும் போது மிர்ஸாவின் புகழ் பாடியவர்களாகவே செல்வதைக் கண்டுள்ளேன். மகராஜ்! மிர்ஸா, தேவியின் வடிவம் ஆவார்.

டாக்டர் பஷாரத் சாஹிப் அவர்களுடைய ஒரு அறிவிப்பில் வருகிறது. அனைத்து பரிசுத்தமும் வானத்தின் ஒளிகளும் அவர்களின் முகத்தில் எப்போதும் தென்படும். அதனை எந்த பேனாவும் விவரிக்க இயலாது. எந்த போட்டோவினாலும் (அத்தகைய காட்சியைக்) காட்ட முடியாது. அவர்கள் சிறிய வாயில் வழியாக வீட்டிலிருந்து பள்ளிவாயிலுக்குள் வரும் போது ஒரு ஒளிப்பிழம்பு உருவெடுத்து நிற்பது போன்று தென்படும். முதலில் எளியவன் அன்னாரை முதன்முதலாக 1891 –ல் சியால்கோட்டில் சந்தித்தேன். அன்னார் ஹகீம் ஹிஸாமுத்தீன் மர்ஹூம் சாஹிப் உடைய வீட்டிலிருந்து வெளியில் வந்தார்கள். வீதியில் இறங்கி எதிர்ப்புறத்தில் உள்ள ஒரு கட்டடத்திற்கு சென்றார்கள். எனக்கு ஒரு ஒளிப்பிழம்பு என் கண் முன்னே கடந்து செல்வது போன்று தான் தென்பட்டது. பரிசுத்தத்தின் பரிசுத்தமான அத்தோற்றத்தைக் கண்டதும் தன்னிச்சையாக இது ஒரு பொய்யரின் தோற்றமல்ல என்று நான் கூறிவிட்டேன். மாறாக, பெரும் பரிசுத்தவானின் தோற்றமாகும்.

ஒருமுறை குளிர்காலமான மாலை நேரமாக இருந்தது. நான் காதியான் சென்றிருந்தேன். மழையும் பெய்து கொண்டிருந்தது. கடுங்குளிர் காற்றும் வீசியது. மஸ்ஜித் முபாரக் –ல் மக்ரிப் தொழுகை நடந்தது. சற்று இருட்டாகவும் இருந்தது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் (அலை) அவர்கள் உள்ளே வந்தார்கள். மெழுகுவர்த்தி ஒன்று அவர்களின் கையில் இருந்தது. அந்த ஒளி அவர்களின் முகத்தில் பட்டு மின்னியது. அல்லாஹ்! அல்லாஹ்! அந்த முகத்தில் கண்ட ஒளியை என்னால் இன்றுவரை மறக்க முடியவில்லை. சூரியனைப் போன்று முகம் மின்னியது. அதற்கு முன் மற்ற ஒளிகள் எல்லாம் ஒளியற்றதாகத் தெரிந்தன.

**ஹஸ்ரத் சவுத்ரி பரக்கத் அலி கான் சாஹிப் கர்சங்கரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

பைஅத் வாங்குவதற்கு ஒப்புதல் கிடைத்த ஒரு மாதத்திற்குப் பிறகு டாக்டர் முஹம்மத் இஸ்மாயில் சாஹிபிடம் கேட்டேன். நான் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்ய விரும்புகிறேன். நான் எனது ஊரை விட்டு ஒருபோதும் வெளியே சென்றதில்லை. இரயிலைப் பார்த்ததும் இல்லை. எனக்கு காதியான் செல்வதற்கு வழியைக் கூறுங்கள். அப்போது டாக்டர் இஸ்மாயில் சாஹிப், நீங்கள் இங்கிருந்து பங்கர் செல்லுங்கள். அங்கு மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் மர்ஹூம் உடைய கடைக்குச் சென்று அவரிடம் பக்கவாடா இரயில்வே ஸ்டேஷனுக்கு வழி சொல்லுமாறு கேளுங்கள். அங்கிருந்து இரயிலைப் பிடித்து பட்டாலா சென்று சேருங்கள். பட்டாலாவுக்கு இரவு பத்து மணிக்கு போய் சேர்வீர்கள். இரயில்வே ஸ்டேஷனில் இரவு தங்கிக் கொள்ளுங்கள். பிறகு சுபுஹ் தொழுகைக்குப் பிறகு காதியானுக்கு கரடு முரடான ஒரு வழி செல்லும். அது வழியாக காதியானுக்கு நடந்து விடுங்கள் என்று கூறினார். அதே போன்று நான் சென்றேன். பட்டாலா ஸ்டேஷனில் இறங்கியதும் ஒரு சிறு பள்ளிவாயில் கண்ணில் பட்டது. பள்ளிவாயிலில் இரவில் தங்கிக் கொள்ளலாம் என்று கூறிக்கொண்டேன். காலையில் காதியான் போக வேண்டும். பள்ளிவாயிலுக்கு அப்போதுதான் போயிருக்கிறேன். ஒரு மனிதர் வந்து, நீங்கள் யார்? என்று கேட்டார். நான் பயணி ஆவேன். நான் காதியான் போக வேண்டும் என்று சொன்னேன். அம்மனிதர் என்னை திட்டத் தொடங்கினார். மிர்ஸாயிகள் வந்து பள்ளிவாயிலை அசுத்தமாக்குகின்றனர். பிறகு பள்ளிவாயிலைக்

கழுவ வேண்டியதாகி விடுகிறது. வெளியே போய் விடும் என்று கூறினார். நான் இங்குதான் இரவு தங்குவேன். வெளியில் போக முடியாது. என்னை இறைவனின் பள்ளிவாயிலிலிருந்து எப்படி வெளியேற்றுவீர்கள் என்று கூறினேன். பிறகு அம்மனிதர் திட்டிக் கொண்டே போய் விட்டார். சுபுஹ் தொழுகையை அதன் ஆரம்ப நேரத்திலேயே தொழுது விட்டு புறப்பட்டேன். காதியானில் மஸ்ஜித் முபாரக் சென்றடைந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு ஜன்னல் வழியாக பள்ளிவாயிலுக்கு வந்தார்கள். நான் ஹுஸுரைப் பார்த்ததும் தன்னிச்சையாக இது ஒளியே தான். இது உண்மையாளரின் முகமே ஆகும் என்று கூறினேன். இந்த பரிசுத்தமான மனிதரைத்தான் அல்ஹகம் பத்திரிகையில் கலிமா தய்யிபாவைப் பற்றி கற்றுத் தந்த, காலத்தின் இமாம் ஆகிய இவரைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன்.

**ஹஸ்ரத் முஹம்மத் ஸதீக் ஸாயில் குபியாட் உடைய அறிவிப்பில் வருகிறது.**

நபியுல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சந்திப்பு முன்னாள் ஹெட் கிளார்க் கேமல்பூர் அவர்களும், தற்போது காதியானுக்கு இடம்பெயர்ந்து முஹல்லா தாருல் ஃபஸ்ல் -லில் இருப்பவருமாகிய பக்ருத்தீன் சாஹிப் மூலமாக கிடைத்தது. அவர்கள் வீட்டிலிருந்து என்னை காதியான் தாருல் அமானுக்கு அழைத்துச் சென்றார். அப்போது எனக்கு 10 வயது இருக்கும். ஒரு மாட்டு வண்டியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். நிறைய பேர் வண்டியுடன் ஓடியவாறு திரையை விலக்கி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தார்கள். நான் இறையருளால் பிறப்பிலேயே அஹ்மதியாக இருந்தேன். இருந்த போதிலும் மஸ்ஜித் முபாரக்கில் 3 – 4 நபர்களுடன் சேர்ந்து அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்யும் வாய்ப்பு அன்று எனக்கு கிடைத்தது. பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நீண்ட துஆ செய்தார்கள். பைஅத் வார்த்தைகளைக் கூறும் போது மிகவும் உருக்கத்துடன் கூறினார்கள். அவர்களின் முகம் ஒளி வீசியது. அதனை ஒரு மனிதனால் எப்படி விளக்க முடியும்?

**ஹஸ்ரத் ஃபஸ்ல் அஹ்மத் சாஹிப் பட்வாரி நங்கல் பகுதியைச் சார்ந்தவர் அறிவிப்பு செய்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கரம்தீன் சாஹிப் உடைய வழக்கு முடிந்து காதியான் திரும்பியிருந்தார்கள். மாலை நேரமான மக்ரிப் நேரத்தை விட கொஞ்சம் குறைவாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளிவாயிலுக்குள் வந்ததும் பள்ளிவாயிலே பிரகாசமானது. இப்போது வரை அது என் கண்ணுக்குள் நிற்கிறது.

பிறகு **சவுத்ரி அலி முஹம்மத் சாஹிப் கொந்தல்** வடக்கு சர்கோதக் அவர்கள் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் மிர்ஸா முபாரக் அஹ்மத் சாஹிப் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கடைசி மகன் சிறு வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள்) அவர்களது வஃபாத்திற்குப் பிறகு 7 நாட்களுக்கு முன் மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப், முஹம்மது ஆரிப் சாஹிப் உடைய தந்தை இன்னும் இருவர் அவர்களது பெயர் எனக்கு இப்போது நினைவில் இல்லை. நாங்கள் நால்வரும் பைஅத் செய்வதற்காக காதியான் வந்தோம். அதற்கு முன்பே நான் கடிதம் மூலம் பைஅத் செய்து விட்டேன். நாங்கள் நால்வரும் அழைக்கப்படுகிற சப்தம் கேட்டு எமது இருப்பிடத்திலிருந்து வெளியில் வந்தோம். இரண்டு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஒன்று பெரியது. இன்னொன்று சிறியது. பெரிய கட்டிலில் உட்காருமாறு கூறினார்கள். சிறிய கட்டிலில் தாம் அமர்ந்திருந்தார்கள். எங்களுக்கு பயம் ஏற்பட்டது. கட்டிலை விட்டு இறங்கி கீழே உட்கார முயன்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் கட்டிலில் உட்காருமாறு கூறினார்கள். பிறகு நிர்பந்தமாக கட்டிலில் உட்கார வேண்டியதாயிற்று.

இதிலிருந்து அவர்களின் உயர் நல்லொழுக்கம் தெரிய வருகிறது. நான் எல்லாரையும் விட வயதில் சிறியவனாவேன். எனவே கீழே உட்கார விரும்பினேன். மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப் மவ்லவி ஆரிப் சாஹிபின் தந்தை. அன்னார் என்னை விட வயதில் பெரியவர். மவ்லவிகளுக்கே உரித்தான பெரிய தாடியும் வைத்திருப்பார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நேர் எதிரில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப் உடைய கையைப் பிடிப்பார்கள். நாம் அனைவரும் அவ்விருவரின் கையில் கை வைத்து பைஅத் செய்ய வேண்டும் என்று

நினைத்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது எண்ணத்திற்கு மாற்றமாக எனது கையைப் பிடித்தார்கள். எங்கள் கைகளின் மீது மற்றவர்கள் கையை வைத்தனர்; பைஅத் செய்தனர். எனது கையின் மீது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் கை பட்டதும் என் மீது ஒரு மின்னல் பாய்ந்தது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. அவர்களின் கம்பீரத்திற்கு முன் எவருக்கும் எந்தப் பெருமையும் இல்லை என்று நான் அப்போது நினைத்தேன். அப்போது அன்னாரை நபி என்று கருதியே பைஅத் செய்தோம். இதிலிருந்து பெரியவர்கள் மீது மட்டும் அவர்களின் பார்வை இருக்கவில்லை. சிறியவர்களையும் கூட பரிவுடன் கவனித்து வந்தார்கள் என்று தெரிய வருகிறது. அவர்களின் வஃபாத்தின் போது பலர் தடுமாறினர். அஹ்மதிய்யத்தை விட்டு பின்வாங்கினர். ஆனால் நான் அவ்வளவு படிக்காதவனாக இருந்தாலும், முழு உலகும் அஹ்மதிய்யத்தை விட்டு விட்டாலும் நான் அஹ்மதிய்யத்தை விட மாட்டேன் என்னும் அளவுக்கு உறுதி என்னிடம் ஏற்பட்டது.

போஸ்ட்மாஸ்டர் ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிப் நபல்பூல் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை நான் மிகவும் நோயுற்றேன். மயக்கமுற்று இருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறைக்குள் வந்தார்கள். அறையே ஒளிக்குமேல் ஒளியாக ஆகி விட்டது. மருந்துகளால் நிரப்பப்பட்ட அலமாரி ஒன்று அறையில் இருந்தது. தமது அருளுக்குரிய கைகளால் அதனைத் திறந்து ஒரு குப்பியிலிருந்து மருந்தை எடுத்து, முன்ஷிஜா! இந்த மருந்தை ஒன்று, மூன்று மிடறு அருந்துங்கள் என்றார்கள். அதற்குப் பிறகு அல்லாஹ் எனக்கு நிவாரணம் வழங்கினான்.

பிறகு **மீர் ஸய்யது அனாயத் அலி சாஹிப்** அறிவிக்கின்றார்.

டிப்டி அமீர் அலி சாஹிப் உடைய வீடு ஹஸ்ரத் மஸீய் மவ்வூது (அலை) அவர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. வீட்டிலுள்ள சில பொருள்களை அங்கிருந்து அகற்றி விடுங்கள். ஏனெனில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபை சந்திப்பதற்காக ஏழைகளும் வருவர். பிறகு நீர் ஏதும் புகார் சொல்லும்படி ஆகிவிட வேண்டாம் என்று கூறப்பட்டது. அவர் கூறினார்: மிகப்பெரும் ஒரு மனிதரின் கையில் நாங்கள் பைஅத் செய்யப் போகிறோம். அதில் எமக்கு மகிழ்ச்சிதான் என்று கூறிவிட்டார். ஸ்டேஷனில் கடும் சப்தம் ஆரவாரமாக இருந்தது. நிறைய மக்கள் ஒன்றுகூடிவிட்டனர். அனாயத் அலி சாஹிபைத் தவிர வேறு யாருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுடைய ஒளி பொருந்திய முகம் அறிமுகமாக இல்லை. நானும் மெயின் கேட்டில் நின்றிருந்தேன். பீர் சாஹிப் உள்ளே சென்றார். நான் டிக்கெட் வசூலிப்பவரின் அருகில் நின்றிருந்தேன். மிர்ஸா சாஹிப் மட்டும் சென்று ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைத் தேடத் தொடங்கினார். அந்த வேளையில் ஹஸ்ரத் சாஹிப் இன்னொரு வண்டியிலிருந்து இறங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் சாஹிபுடன் மூன்று பேர் இருந்தார்கள். எனக்கு யாரையும் தெரியாது. நான் அந்த பயணிகளின் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்களுள் ஒருவரின் முகத்திலிருந்து சாந்தம் கண்டு இவர் தான் இமாம் என்று புரிந்து கொண்டேன். அவர்களிடம் கை குலுக்கினேன். கைகளுக்கு முத்தமிட்டேன். கூட வந்த மூவர் மவ்லவி ஜான் முஹம்மது பகா சாஹிப் உடைய தந்தையார் ஹாபிஸ் ஹாமித் அலி சாஹிப் மர்ஹூம், லாலா மலாவல்மால் சாஹிப் ஆவர்.

இன்னொரு அறிவிப்பில், மியான் புரோஸ்தீன் சாஹிப் சியோல்கோட்டைச் சேர்ந்தவர் அறிவிக்கின்றார். ஹுஸூர் (அலை) அவர்கள் மஸீஹிய்யத்திற்கான வாதம் செய்த போது அதற்கு சிறிது காலத்திற்குப் பிறகு எனது தாதா சாஹிப் பைஅத் செய்தார். குடும்பத்தினர் எல்லாரையும் அழைத்து, நான் ஹுஸூர் (அலை) அவர்கள் இங்கு வேலை செய்த காலத்திலேயே அவர்களை நன்கறிந்தவன். எனவே நீங்கள் அனைவரும் பைஅத் செய்யுங்கள். இது ஒரு பொய்யரின் முகமாக இருக்க முடியாது என்று கூறினார். இந்த அடிப்படையில் 1892 -ல் குடும்பம் முழுவதும் பைஅத் செய்தது.

இன்னொரு அறிவிப்பு டாக்டர் அப்துல் மஜீத் கான் சாஹிப் அறிவிப்பாகும். அது கோடை காலமாக இருந்தது. மதியம் 1.00 மணி அளவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியே வந்தார்கள். நான் மெதுவாக அவர்களை பின் தொடர்ந்தேன். இந்நேரம் ஹுஸூர் எங்கே செல்கிறார்கள்? என்று பார்க்கப் போனேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு மரத்தடியில் அப்போதைய ஜல்ஸா திடல் அருகில் நின்று திடீரென்று திரும்பி கூறினார்கள். நீர் எனக்கு பின்னால் வர வேண்டாம் என்றார்கள். நான் அங்கேயே

நின்று விட்டேன். அன்னார் அதனை விட 2 பர்லாங் தூரம் சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்தார்கள். ஒரு பத்து நிமிடங்கள் அங்கு அமர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் துஆ செய்கிறார்களா? என்று என்னால் பார்க்க முடியவில்லை. தூரம் அதிகமாக இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்கள் என்னை பின்னால் வரவேண்டாம் என்று சொன்னது நினைவுக்கு வந்ததும் நான் திரும்பி வந்தேன். இந்த சம்பவத்தை எனது மர்ஹுமா தாயாரிடம் கூறிக் கொண்டிருந்த போது பாங்கு ஒலிக்கும் சப்தம் வந்தது. ஹுஸுரும் வந்து விட்டார்கள். ஹுஸுரின் முகம் மின்னிக் கொண்டிருந்தது. அல்லாஹ்வின் தரப்பிலிருந்து நற்செய்தி கிடைத்திருக்கும்.

பிறகு **மவ்லவி ஃபஸ்ல் இலாஹி சாஹிப் காதியான்** அவர்களின் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

ஒரு முறை நடந்த சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது. மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் கிழக்குப் புறமாக திரும்பியிருந்தார்கள். அப்போது பிறை 15 இருக்கும். கிழக்கிலிருந்து சந்திரன் உதயமானது. இந்த எளியவன் மேற்குப் புறமாக ஹுஸுர் (அலை) அவர்களுடைய முகத்தைப் பார்த்து அமர்ந்திருந்தேன். ஹுஸுரின் முகத்திலிருந்து ஒளிக்கதிர்கள் புறப்பட்டு சந்திரனின் ஒளியோடு மோதுகின்றது.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

1904 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹுர் சென்றார்கள். ஒரு ஜல்ஸாவில் அன்னார் சொற்பொழிவு ஆற்றினார்கள். அஹ்மதியல்லாத நண்பராகிய சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் வக்கீல் அவர்களும் அங்கு இருந்தார்கள். சொற்பொழிவுக்கிடையில் நான் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முகத்தில் இருந்து ஓர் ஒளி புறப்பட்டு வானத்தை நோக்கி செல்கிறது. அப்போது என்னுடன் இன்னொரு நண்பரும் இருந்தார். நான் அவரிடம் இது என்ன பாருங்கள்! என்று கூறுகிறேன். உடனே பார்த்து விட்டு அவர், இது ஒளிப்பிழம்பாகும். மிர்ஸா சாஹிப் தலையிலிருந்து வெளிப்பட்டு வானம் வரை செல்கிறது என்று கூறினார். இந்த காட்சியினால் சேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபுக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டது. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்.

ஹஸ்ரத் மியான் குலாம் முஹம்மது சாஹிப் குர்தாஸ்பூர் அறிவிக்கிறார்.

நான் 1907 -ல் பைஅத் செய்தேன். தொடர்ந்து ஜுமுஆவுக்கு சென்று வந்தேன். ஹுஸுர் அவர்கள் லாஹுர் சென்ற போது அங்கு நோயுற்று வஃபாத் ஆகி விட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. இதோடு இந்த இயக்கம் முடிந்து விட்டது. மிர்ஸா சாஹிபின் முகம் கருத்துப் போய் விட்டது – நவூதுபில்லாஹ் என்று எதிரிகள் தீய பிரச்சாரம் செய்தனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் தனது பையன்களோடு இப்ராஹீம், ஜான் முஹம்மது ஆகியோரோடு செல்வார். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்று அவர்கள் கூறுவார். இரு பையன்களும் ஹுஸுரின் காலடியில் இருப்பர். ஹுஸுர் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். ஹுஸுர் வஃபாத் ஆனதும் அவர் அந்த இரு பையன்களுடன் காதியான் வந்தார். பையன்களுக்கும் ஹுஸுர் அவர்களின் முகத்தைக் காட்டினார். அவரும் பார்த்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முகத்தை தமக்கு பார்க்க வேண்டும் என்று இருவரும் மிகவும் அழுததாக கூறினார். இவ்வாறு நான்கு முறை ஹுஸுர் அவர்களின் முகத்தை அச்சிறுவர்களுக்கு காட்டினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஆன்மீக ஒளியைப் போன்றே இவர்களின் முகமும் இருந்தது என்று கூறி வந்தார். அதற்குப் பின்னர் அப்படி நடக்கவும் இல்லை. வருங்காலத்தில் நடக்கப் போவதும் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அசல் எனில் அதன் பிம்பமாக இருந்தார்கள். அதாவது இவர் கூற வருவது என்னவென்றால் எதிரிகள் மிர்ஸா சாஹிபின் முகம் கருப்பாகி விட்டது என்று பிரச்சாரம் செய்தனர். ஆனால் நாங்கள் அவர்கள் வஃபாத் ஆன போது அவர்களின் முகத்தை காணவே செய்தோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முகத்தைப் பற்றி அது ஒளி பொருந்தியதாக இருந்ததாக படித்துள்ளோம். இங்கு இவர்களின் முகத்தையும் அப்படியே கண்டோம். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நிழலாக இருந்தார்கள். அவர்கள் அசல் எனில் இவர்கள் பிம்பமாக இருந்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் உடைய கையில் பைஅத் செய்து விட்டு திரும்பினோம். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அற்புதங்களை விளக்கியவாறு கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அற்புதங்களை எடுத்துக் கூறி தப்லீக் செய்யத் தொடங்கினோம்.

இதுபோன்று அளவற்ற அறிவிப்புகள் உள்ளன. வருங்காலத்தில் இன்ஷா அல்லாஹ் எடுத்துரைக்கப்படும். இப்போது இன்னும் சில அறிவிப்புகளைக் கூறுகிறேன். அவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்கள் சம்பந்தப்பட்டவை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததன் காரணமாக அவர்கள் பெற்ற சிறப்பை விளக்குபவையாகும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கலீபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட போது சில உலகியல்வாதிகள் சோதனைக்குள்ளாகினர். ஜமாஅத்தை விட்டு தனியே பிரிந்தும் போய் விட்டனர். அல்லாஹ் பெரும்பாலானவர்களைப் பாதுகாத்தான். சிலருக்கு உடனே வழிகாட்டலும் வழங்கினான். ஹஸ்ரத் குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி அவர்கள் எழுதுகிறார். ஒருமுறை நான் மஸ்ஜித் அஹ்மதிய்யா பெஷாவரில் அமர்ந்திருந்தேன். எனக்கு அருகில் பெஷாவர் அமீர் மியான் சம்சுதீன் சாஹிப் அமர்ந்திருந்தார்கள். எனக்கு திடீரென்று கஷ்ஃப் –ன் நிலை ஏற்பட்டது. ஸய்யதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வந்துள்ளார்கள். அவர்களின் உள்ளம் எனக்கு முன்னால் தென்படுகிறது. அது மிகவும் பிரகாசமாக மின்னுகிறது. அதன் ஒளிக்கதிர்கள் மிகவும் வேகமாக என் மீதும் படுகின்றன. அவர்களின் உள்ளத்திற்கு எதிரில் எனது உள்ளம் உள்ளது. பல்பு போன்று ஒளி தென்பட்டது.

சான்றோர் ஆகவும், நல்லியல்ப கொண்டவராகவும் குலாம் ரஸூல் ராஜேகி சாஹிப் விளங்கினார். குறித்த நேரத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தும் இருந்தார்கள். அவ்வாறிருந்தும் மேலும் அவர்களின் ஈமானை வலுவூட்டுவதற்காக இறைவன் அவர்களுக்கு இக்காட்சியைக் காட்டினான்.

ஒரு அறிவிப்பு ஹஸ்ரத் ஷோனே கான் சாஹிப் சட்டியானா ஹோஷியார்பூர் அவர்கள் கூறுகிறார்கள். நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய உண்மைக்கு சான்றாக சில விஷயங்களைக் கூறுகிறேன். அஹ்ராரார்கள் மிகவும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். ஜமாஅத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல குழப்பங்களை ஏற்படுத்தினர். அப்போது நான் துஆ செய்யத் தொடங்கினேன். என் இறைவா எனது தலைவரை கண்ணியம் செய்வாயாக. அவர் உனது மஸீஹின் மகனாவார். இவ்வாறு மிகவும் அதிகமாக துஆ செய்தேன். அதிகமாக தரூதும் அல்ஹம்தும் ஓதினேன். துஆ தொடர்ந்து செய்து வந்தேன். கனவில் என்னிடம் ஒரு மனிதர் வந்தார். கிழக்கில் ஒரு பெரிய ஊரில் மவ்லவிமார்கள் வந்துள்ளனர். அந்த மவ்லவிகள் அஹ்மதிய்யத்தை நாங்கள் வேரோடு சாய்ப்போம் என்று கூறுகின்றனர். கனவிலேயே நான் அஹ்மதியாகிய பரக்கத் அலி, பத்ஹ் அலி இருவரையும் அழைத்துக் கொண்டு அவர்களை நோக்கி போகிறேன். அங்கு பண்டோரி என்பவரின் வீட்டருகில் சென்றதும் தொழுகை நேரம் வருகிறது. இரு அஹ்மதிகளையும் பின்னிறுத்தி தொழுகை நடத்துகிறேன். அதற்குள் கிரத் கான், குலாம் கவ்ஸர் கான் ஆகியோரும் வந்து விட்டனர். வானத்தைப் பார்க்கிறேன். அதில் இரண்டு சந்திரன்கள் உள்ளன. ஒரு சந்திரன் மிகவும் ஒளியுடனும் இன்னொன்றும் அதேபோன்ற வடிவத்துடன் இருந்தது. ஆனால் அதில் ஒளியும் இல்லை பிரகாசமும் இல்லை. நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அதுவும் ஒளிபெற்று முன்னதைப் போன்று ஒளிமயமாகி விட்டது. நான் துஆ செய்தேன். இரண்டும் ஒரே போன்று ஒளி வீசுகின்றன என்று கூறுகிறேன். அந்நிலையில் விழிக்கிறேன். முதல் ஒளி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள். இரண்டாவது சந்திரன் இப்போது ஒளிவீசத் தொடங்கியுள்ள ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஆவார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களின் வாக்களிக்கப்பட்ட மகன் ஆவார்கள். அவர்களைப் பற்றி எண்ணற்ற முன்னறிவிப்புகள் உள்ளன. முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பும் ஆகும். எல்லா அஹ்மதிகளுக்கும் தெரியும். அவர்களின் கிலாஃபத்தில் பெரும் குழப்பங்கள் நடந்த போதிலும் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஒளியை

பரப்புவதற்கு பெரும் வேலைகள் நடைபெற்றன. அப்போதும் குழப்பங்கள் எழுந்தன. இப்போதும் அவ்வப்போது குழப்பங்கள் எழுந்து கொண்டுதான் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பெயரிலும் சில குழப்பங்கள் எழுகின்றன. சிலர் ஜமாஅத்தில் மூளை குழம்பிப் போய் சில நேரம் சிந்தித்தோ சிந்திக்காமலோ முஸ்லிஹ் மவ்வூது என்று வாதம் செய்பவர்களும் உருவாகின்றனர் என்பதையும் ஜமாஅத்தில் அவ்வப்போது பார்த்து வருகிறோம். மூளை பலவீனத்தால் சில அப்பாவிகள் இதுபோன்று கூறும் போது அவர்களை தூண்டி விட்டு இந்த குழப்பத்தில் சேர்ந்து கொண்டு இதற்கு வலுவூட்டுபவர்களும் உருவாவதுதான் உண்மையிலேயே பெரும் ஆபத்து ஆகும். இவர்கள் நிச்சயமாக முனாஃபிக் ஆவார்கள். இம்மக்கள் பிறகு ஜமாஅத்தையும் விட்டு விடுகின்றனர். இதற்கு ஒரே காரணம் ஜமாஅத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி ஜமாஅத்தை கைப்பற்றுவதுதான். மற்றபடி முஸ்லிஹ் மவ்வூது பற்றி உறுதியாக நம்பாமல் இருப்பது ஓர் அறிவீனமாகும். அந்த அளவுக்கு தெளிவான ஆதாரங்கள் உள்ளன.

ஹஸ்ரத் குலாம் ரஸுூல் ராஜேகி சாஹிப் உடைய இன்னொரு அறிவிப்பில், ஸய்யதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் இந்த எளியவன் ஒருமுறை கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு மிகச் சிறந்த செயல்படும் மூளை வாய்க்கப் பெற்றது. இந்த மூளை வளர்ச்சியுடன் ஹுஸுூரின் வழிகாட்டலுடன் அதிகப்படும்போது உள்ளமும் ஒளிபெறுகிறது. அந்தரங்க ஒளி உருவாகும். அல்லாஹ் அதனையும் வழங்குவானாக. இதற்கு பிறகு காதியானில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒருமுறை சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். அறிவும் ஞானமும் அதில் மிகுந்து இருந்தன. அதில், இளைஞர்கள் ஒவ்வொரு பர்ள் தொழுகைக்குப் பிறகு சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம் என்று 12 முறையும், ஸலவாத் 12 முறையும் கூறி வர வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். குத்தாம்களுக்கு ஹுஸுூர் கூறியிருந்தாலும் நான் அதே நாளில் இருந்து அதன்படி அமல் செய்தேன். இன்று வரை செய்து வருகிறேன். பல பயன்கள் அதனால் எனக்கு கிடைத்துள்ளன. அதில் ஒரு பயன் எனக்கு உளத்தூய்மை மற்றும் ஆன்மீக ஒளி கிடைத்துள்ளது. அதன் மூலம் பல வகையான ஒளிகளை நான் உணர்ந்தேன். சூரிய ஒளியை கண்கள் உணருவது போன்று எனது உள்ளம் துஆ செய்யும் போது மின்னலைப் போன்று ஒளி பெறுகிறது. சில வேளை என் தலை முதல் கால் வரை மறைமுகமான முறையில் ஒளியாகி விட்டதாக உணர்வு ஏற்படுகிறது.

ஸய்யதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பின்பற்றி தொழும் வாய்ப்பு கிடைக்கும் போது அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பரிசுத்த சஹாபாக்கள் எவரது பின்னாலும் தொழும் வாய்ப்பு கிடைக்கும் போது, குர்ஆன் கரீமின் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் ஒளிக்கதிர்கள் புறப்பட்டு எனது உள்ளத்தை வந்து அடைவதாக உணர்கிறேன். அப்போது ஓர் வியத்தகு ஆன்மீக நிலையை உணர முடிகிறது. சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம் என்பது பற்றி ஹதீஸில் வருகிறது. கலிமதனானி கலீபதானி அலல் லிஸானி ஸகிலதானி ஃபில் மீஸான ஹபீபத்தானி இலல் ரஹ்மானி. சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம் – அதாவது இரு சொற்கள் சொல்வதற்க நாவிற்கு இலேசானவை. தராசுக்கு மிகவும் கனமானவை. இறையருளை ஈர்ப்பவை அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவை. அதுதான் சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் ஓர் இல்ஹாம் மூலம் இறங்கியது. சுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஆலி முஹம்மதின்.

இந்த துஆவை ஓதி வர வேண்டும். தொடர்ந்து ஓதி வர வேண்டும். ஏனெனில் தஸ்பீஹ் தஹ்மீது உள்ளத்தின் தூய்மைக்கு மிகவும் தேவையாகும். அல்லாஹ்வின் முஹப்பத்தைப் பெறுவதற்கு மிகவும் தேவையாகும். இது மிகவும் உலக ஆசை ஆடம்பரம் மிகுந்த காலமாகும். எனவே நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரச்சாரத்தை தொடர்வதற்கு இந்த துஆவை தொடர்ந்து செய்ய வேண்டும். அப்போது தான் நமது உள்ளமும் ஒளிபெறும். இதிலிருந்து அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பவராவோம். எனவே தருது இபாதத்துகள் மூலம் நமது வாழ்வை நிரப்ப வேண்டும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் ஒளி பெற்றது பற்றி மற்றவருக்கு அல்லாஹ் எவ்வாறு தெரிவிக்கிறான் என்று பார்க்கலாம். ஏனெனில் அல்லாஹ் அறிவித்த பிறகும் கூட சிலருக்கு பயன்பெற முடியவில்லை.

ஹஸ்ரத் குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி கூறுகின்றார்கள்: எனது சச்சாவின் மகனின் சகோதரர் மியான் குலாம் அஹ்மத். இவர் மவ்ஸா லங்கா குஜராத்தைச் சேர்ந்தவர். ஒருமுறை என்னிடம் அவர் ஒரு பணிக்காக அழைத்திருந்தார். அப்போது கடும் கோடைகாலத்தின் நண்பகல் வேளையாக இருந்தது. வழக்கம்போல் நான் தங்கியிருந்த கோட்டரியில் நண்பகல் வேளையில் உறங்கிக் கொண்டிருந்தேன். எனது கண்கள் திறந்தன. குலாம் அஹ்மதின் சிறிய தாயார் கூறுகிறார். இந்த குலாம் ரஸூல் மிர்ஸாயி ஆகி விட்டான். ஊரெல்லாம் அவனைப் பற்றி இழிவாகப் பேசுகின்றனர். தற்செயலாக அதே இடத்தில் எனது சகோதரர் குலாம் அஹ்மதும் விழித்து விட்டார். அவர் தனது சிறிய தாயாரைப் பார்த்து நீங்கள் என்ன உளறிக் கொண்டிருக்கிறீர்கள். நான் அவ்வப்போது கனவில் பார்க்கிறேன். குலாம் ரஸூலின் மீது வானத்திலிருந்து ஒளி மழையாகப் பொழிகிறது. நாலாபுறமும் வெளிச்சமாகிறது. நீங்கள் அவரை தீயவராக கருதுகிறீர்கள். ஆனால் இறைவனின் பார்வையில் அவர் தீயவரல்ல என்று கூறினார். இதனைக் கேட்டு விட்டு வெளியில் வந்து அவர்களுக்கு நான் அஹ்மதிய்யத் பற்றி புரிய வைத்தேன். இதற்கு முன்னரும் கூறியுள்ளேன். ஆனால் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. இதே குலாம் அஹ்மதுக்கு கனவின் மூலம அல்லாஹ் சாட்சிகளை பூர்த்தியாக்கியும் கூட அஹ்மதிய்யத்திற்கு பெரும் எதிரியாக அந்த குலாம் அஹ்மத் ஆகி விட்டார். என்னை இழிவுபடுத்தவும் முயன்று வந்தார். கடைசியில் இறைவன் எனக்கு ஆதரவாக ராஜேகியில் பிளேக் நோயை ஆதிக்கம் செலுத்த வைத்தான். அந்த குலாம் அஹ்மதையும் அவரது கூட்டாளிகளையும் அதன் மூலம் அழித்து விட்டான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். ஒரு மனிதனிடம் வானத்திலிருந்து ஒளி இறங்காமல் எந்த பிரகாசமும் அவனிடம் ஏற்பட முடியாது என்பதே நமது கொள்கையாகும். அருள் வானத்திலிருந்தே இறங்குகிறது என்பது உண்மையாகும். எதுவரை இறைவன் தனது ஒளியை வழங்குவதில்லையோ அம்மனிதனின் ஒரு புழு ஆவான். அவன் விதவிதமான இருள்களிலும் துன்பங்களிலும் மூழ்கி விடுகிறான். அவனது ஒளி பளிச்சிட்டால் பிறகு அவனது உள்ளமும் மூளையும் ஒளிமயமாகி விடுகிறது. அவர் விரைவாக இறைவனை நோக்கி செல்லத் தொடங்குகிறார். எனவே அல்லாஹ்வின் ஒளி அல்லாஹ்வின் அன்பிற்குரியவருக்கு கிடைக்கிறது. அல்லாஹ் நமக்கும் தனது ஒளியிலிருந்து வாய்ப்பளிப்பானாக. உண்மையான ஒளி என்பது அவனது அன்புக்குரியவர்களை நேசிப்பதன் மூலமே கிடைக்கிறது. அதனை பெறுவதற்கான வழியை இக்காலத்தின் இமாம் நூரே முஹம்மதிலிருந்து பங்கு பெற்றவாறு நமக்கு காட்டித் தந்துள்ளார்கள். நாம் உலகின் வீணானவற்றில் வீழ்வதற்கு பதில் நமது இறைவனிடம் அந்த ஒளியை எப்போதும் கேட்டுக் கொண்டிருப்போமாக.

**ரப்பனா அத்மிம்லான நூரனா ஃபக்ஃபிர்லனா இன்னக அலா குல்லி ஷய்யின் கதீர்** – எங்கள் இறைவா எங்கள் நூரை எங்களுக்கு முழுமைப்படுத்துவாயாக. எங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக நீ விரும்புபவற்றை செய்வதற்கு நிரந்தரமான ஆற்றல் பெற்றவனாவாய் (66:9) என்று எப்போதும் துஆ செய்பவர்களுள் நம்மை சேர்ப்பானாக. நமக்கு இவ்வுலகிலும் இந்த துஆவின் தாக்கத்தைக் காட்டுவானாக. மரணத்திற்குப் பிறகும் நிரந்தரமாக இவ்வொளி நம்முடன் இருக்கட்டுமாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 29.01.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**